## ஊடக அறிவித்தல்

## நலன்புரி நன்மைகள் செலுத்துதல் தொடர்பில் தகுதியான குடும்பம்/நபர்களை கண்டறிதல் 2022

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கத்தை கொண்ட நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 7(1) பிரிவுக்கு அமைவாக நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு தகுதியான குடும்பம்/நபர்களை அடையாளம் காணுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கு அமைவாக, தற்போது பொது மக்களுக்கான உதவி நிகழ்ச்சித் திட்டங்களாகிய சமூர்த்தி, முதியோர், அங்கவீனர்கள் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான வாழ்வாதார உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் நன்மைகளை பெறுகின்ற பயனாளிகள் மற்றும் அந்த நிவாரணங்களை எதிர்பார்த்து காத்திருப்புப் பட்டியலில் இருக்கின்ற குடும்பங்களையும் நபர்களையும் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள அரசாங்கத்தின் நலன்புரி நன்மைகளை எதிர்பார்க்கின்ற சகல நபர்களும் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு இலக்காக கொள்ளப்பட்டுள்ளனர். அதற்கு அமைவாக 3.9 மில்லியன் குடும்பங்கள் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு விண்ணப்பிப்பார்கள் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது பல படிமுறைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### முதலாவது படிமுறை - நிகழ்ச்சித் திட்டத்திற்காக விண்ணப்பங்களைக் கோருதல்

நலன்புரி நன்மைகள் சபையின் 2022/08/30 ஆம் திகதியன்று இரண்டு தேசிய பத்திரிகைகளில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரித்த பத்திரிகை அறிவித்தலில் பின்னிணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை விண்ணப்பதாரர்களினால் பூர்த்திசெய்து தான் உரித்தான பிரதேச செயலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பதாரரின் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது வேறு அடையாள அட்டை இலக்கம், மாகாணம், மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு, கிராம உத்தியோகத்தர் பிரிவு, தற்போது நன்மைகளைப் பெறுகின்ற நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய விபரம், குடும்பத்தில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை, காத்திருப்பு பட்டியலில் இருப்பீர்களாயின், அது பற்றிய தகவல், புதிய விண்ணப்பதாரரா என்பது பற்றிய தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவத்தை தொடர்புடைய விண்ணப்பதாரர்களினால் தொடர்புடைய கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம/ சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது சமூக சேவை உத்தியோகத்தர் அல்லது முதியோர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தரின் சான்றுப்படுத்தலுடன் தொடர்புடைய உத்தியோகத்தரினூடாக அல்லது விண்ணப்பதாரரினால் பிரதேச செயலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும்.

### இரண்டாவது படிமுறை - விண்ணப்பப்படிவத்தை தொகுதியில் சேர்த்தல்

நலன்புரி நன்மைகள் சபையினால் விருத்தி செய்யப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் தகவல் தொகுதியுடன் (Welfare Benefit Information System) நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சகல பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலும் இணைக்கப்பட்டுள்ள நலன்புரி நன்மைகள் தகவல் உத்தியோகத்தரினால் கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பப் படிவங்கள் தொகுதியின் மூலம் வழங்கப்பட்டுள்ள (Link) இணைப்பினூடாக கணினிமயப்படுத்துதல் வேண்டும். சகல விண்ணப்பப் படிவங்களுக்கும் QR குறியீடு ஒதுக்கப்படுகிறது. தொகுதியினதும் நிகழ்ச்சித்திட்டத்தினதும் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனுடனும் வெளிப்படைத் தன்மையுடனும் மேற்கொள்வது அதன் நோக்கமாகும் இந்தப் படிமுறையை செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### மூன்றாவது படிமுறை - வீட்டுக் கூறுகளுக்குச் சென்று தகவல்களை திரட்டுதல்

பிரதேச செயலாளரினால் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் தகவல்களை திரட்டுவதற்காக இணைக்கப்பட்டுள்ள கள உத்தியோகத்தர்கள் (தெரிவுக் குழு) தமது தனிப்பட்ட செல்லிடத் தொலைபேசியை (3G Smart Phone) பயன்படுத்தி விண்ணப்பதாரர்களின் வீட்டுக் கூறுகளுக்குச் சென்று தொலைபேசி செயலி ஒன்றைப் (Mobile App) பயன்படுத்தி தகவல்களைத் திரட்டி தொகுதிமயப்படுத்துவது மூன்றாவது படிமுறை ஆகும். சகல தகவல்களையும் திரட்டும் உத்தியோகத்தர்கள் நலன்புரி நன்மைகள்

சட்டத்தின் 21 மற்றும் 22 ஆம் இலக்க பிரிவுகளுக்கு (அரசாங்க உத்தியோகத்தர்கள் செய்யப்படுகின்ற தவறுகள் மற்றும் பிழையான கொடுப்பனவுகளின் போது அதனை மீண்டும் அறவிடுதல்) அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உடன்படுதல் வேண்டும். தகவல் திரட்டல் முடிவடைந்த பின்னர் கள உத்தியோகத்தர்களினால் விண்ணப்பதாரர்களுக்கு தகவல் பெற்றுக்கொள்வதனை சான்றுப்படுத்துகின்ற QR குறியீட்டை உள்ளடக்கிய பத்திரமொன்றை தமது கையொப்பத்தையிட்டு வழங்குதல் வேண்டும். விண்ணப்பதாரரினால் சரியான தகவல் வழங்கப்பட்டுள்ளது என்பதை QR குறியீட்டை உள்ளடக்கிய பத்திரத்தில் கையொப்பமிட்டு சான்றுப்படுத்துதல் வேண்டும். நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்ட 2019.06.20 ஆம் திகதிய 2128/24 ஆம் இலக்கத்தை கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவு செய்வதற்கான தகுதிறன்கள் மற்றும் சுட்டிகளுக்கு ஏற்புடையதாக செல்லிடத் தொலைபேசி செயலி மென்பொருள் மூலம் விண்ணப்பதாரர் மற்றும் குடும்பம் பற்றிய விவரமான தகவல்கள் திரட்டப்படுகின்றன. பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இவ்வாறு தகவல் திரட்டப்பட்ட விண்ணப்பதாரர்களின் பெயர்ப் பட்டியலுக்கு பிரதேச செயலாளரின் அனுமதி கிடைத்ததன் பின்னர், அந்த பெயர்ப் பட்டியல் தொகுதிமயப்படுத்தப்படுகின்றது. வீட்டுக்கூறு மட்டத்தில் தகவல்களை திரட்டும் இந்தப் படிமுறை செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

**நான்காவது படிமுறை - தெரிவு செய்வதற்கான தகுதிறன்கள் மற்றும் சுட்டிகளுக்கு அமைவாக புள்ளிகளை வழங்குதல்**

நலன்புரி நன்மைகள் சபையினால் வெளியிடப்பட்ட 2019.06.20 ஆம் திகதிய 2128/24 ஆம் இலக்கத்தை கொண்ட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான 6 தகுதிறன்கள் (கல்வி/ சுகாதாரம்/ பொருளாதார நிலை/ சொத்துக்கள்/ வீட்டின் நிலை/ குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை) மற்றும் அது தொடர்பான 22 சுட்டிகளின் கீழ் வறுமையை கணக்கிடும் சூத்திர முறை தயாரிக்கப்பட்டுள்ளது. நலன்புரி நன்மைகள் தகவல் தொகுதி வறுமையைக் கணக்கிடும் சூத்திரத்திற்கு அமைவாக சகல விண்ணப்பதாரர்களுக்கும் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. அந்த வறுமை புள்ளியின் அடிப்படையில் நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளுக்கு தகுதியான நபர்களின் பெயர்ப் பட்டியல் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் காட்சிப்படுத்தப்படுகின்றன. டிசம்பர் மாதம் 15 ஆம் திகதியளவில் இந்தப் படிமுறையை முடிவுறுத்துவதற்கு சபை எதிர்பார்க்கின்றது.

**ஐந்தாவது படிமுறை - மேன்முறையீடுகள்/ எதிர்ப்புகளை கோருதல்**

நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 11(1) ஆம் இலக்க பிரிவின் கீழ் எதிர்ப்புகள் மற்றும் மேல்முறையீடுகளைக் கோருதல் பற்றிய பகிரங்க அறிவித்தல் ஒன்று சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. யாரேனும் ஒரு நபருக்கு அல்லது விண்ணப்பதாரருக்கு பிரதேச செயலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பெயரப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்கு எதிர்ப்பினை தெரிவிக்கவோ அல்லது உரிமை கோரலை முன்வைக்கவோ முடியும். முறைப்பாட்டாளறினால்/மேன்முறையீட்டாளரினால் முறைப்பாடு மற்றும் உரிமை கோரல் தொடர்பான விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து பிரதேச செயலகத்திற்கு ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு கிடைக்கின்ற முறைபாடுகள் அல்லது உரிமைகோரல் பற்றி பரிசீலனை செய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவுக்கு அமைவாக, சபையினால் மேன்முறையீட்டு குழுவை நியமித்தல் வேண்டும். மேன்முறையீட்டு குழுவினால் தொடர்புடைய எதிர்ப்புகள்/ உரிமைகோரல் சம்பந்தமான வேண்டுகோள்கள் பற்றி விசாரணை செய்து, அதன் தீர்மானத்தை பிரதேச செயலாளருக்கும் சபைக்கும் அறிவித்தல் வேண்டும். மேன்முறையீட்டு குழு, சபையினால் வெளியிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பது கட்டாயமானதாகும்.

**ஆறாவது படிமுறை - பயனாளிகளின் பெயர்ப் பட்டியலை பகிரங்கப்படுத்துதல்**

பிரதேச செயலாளரினால் நலன்புரி நன்மைகளுக்காக தகைமை பெற்றுள்ள இறுதி பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் நலன்புரி நன்மைகள் சபையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சபையின் அனுமதியின் பின்னர் நன்மைகள் கொடுப்பனவுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் பகிரங்கப்படுத்தப்படும்.

நலன்புரி நன்மைகள் செலுத்துதல் தொடர்பில் தகுதியான குடும்பம்/நபர்களை கண்டறிவதற்கான நிகழ்ச்சித்திட்டம் 2022 இனை வெற்றிபெறச் செய்வதற்கும் அதனை மக்கள் மயப்படுத்துவதற்கும் சகல ஊடக நிறுவனங்களினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன். அரசாங்க நலன்புரி எண்ணக்கருவை மிகவும் உற்பத்தித் திறனுடனும், வினைத்திறனுடனும் மற்றும் வெளிப்படைத் தன்மையுடனும் மேம்படுத்தும் குறிக்கோளை வெற்றியடைவதற்கு சகல ஊடக நிறுவனங்களினதும் பங்களிப்பை எப்போதும் எதிர்பார்க்கின்றேன்.

பி.விஜயரத்ன

தலைவர்/ ஆணையாளர்

நலன்புரி நன்மைகள் சபை

தொலைபேசி இலக்கம் :- 0112484600 நீடிப்பு 4117

தொலைநகல் இலக்கம் :- 0112151482

மின்னஞ்சல் : info@iwms.wbb.gov.lk

welfarebenefitboard2016@gmail.com

பங்குதாரர் நிறுவனங்கள் - பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்;ராட்சி அமைச்சு

மகளிர், சிறுவர் விவகார, சமூக வலுவூட்டல் அமைச்சு

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

முதியோர்களுக்கான தேசிய மன்றம் மற்றும் செயலகம்

அங்கவீனர்களுக்கான தேசிய செயலகம்

புள்ளிவிபரவியல் மற்றும் தொகைமதிப்பு திணைக்களம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பற்றிய முகவர் நிறுவனம்